# 4. தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தச்சட்டம் 1998

**நோக்கம்**

தமிழக அரசின் ஒப்பந்த நடைமுறைகளில் நிலவிவந்த குறைபாடுகளையும் வெளிப்படை தன்மை இல்லாத நிலையையும் போக்கி ஒளிவுமறைவற்ற நடைமுறை மூலம் ஒப்பந்தப் புள்ளிகளில் பெரும்பாலான தகுதியான அனைவரையும் ஈடுபட சம வாய்ப்பளித்து முறைகேடுகளற்ற நேர்மையான ஒப்பந்த நடைமுறையை செயல்படுத்துதல் நோக்கமாகும்.

**விளைவு-**

ஒப்பந்தங்களில் நியாயமான. வெளிப்படைத் தன்மை வாய்ந்த நடைமுறைகள் ஒப்பந்தங்கள் வாயிலாக ஆரோக்கியமான போட்டிகள் மூலம் தகுதியான ஒப்பந்தங்களை ஏற்படுத்துவதன் மூலம் குறைந்த விலையில் சிறந்த தரமான பணிகளை / சேவைகளை அடைவது விளைவாகும்.

மேற்குறித்த நோக்கம் மற்றும் விளைவிற்காக தமிழக அரசு 1998 ஆம் ஆண்டு சட்டமன்ற நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்த சட்டத்தை இயற்றியது. இச்சட்டம் 01/10/2000 முதல் நடைமுறைப்படுத்த ஏதுவாக அரசு ஆணை எண் 445 நிதித்(சம்பளம்) துறை நாள் 26/09/2000ல் வெளியிடப்பட்டது.

இச்சட்டத்தை செயல்படுத்த நிதித்(சம்பளம்) துறை அரசாணை எண் 446 நாள் 26/09/2000-ல் விதிகளை உருவாக்கி ஆணையிடப்பட்டது. இவ்விதியானது தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்த விதிகள் 2000 என அழைக்கப் பெறுகிறது. மேலும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை தொடர்பான ஒப்பந்தங்கள் தொடர்பாக பின்வரும் அரசாணைகளையும் கவனத்தில் கொள்க.

1. ஆணை எண் 286 ஊரக வளர்ச்சி துறை நாள் 31/12/1998/
2. அரசாணை எண் 446 நிதி(சம்பளம்) துறை நாள் 26/09/2000
3. அரசாணை எண் 447 நிதி(சம்பளம்) துறை நாள் 26/09/2000
4. அரசாணை எண் 471 நிதி(சம்பளம்) துறை நாள் 30.09.2007
5. அரசாணை எண் 203 ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் துறை நாள் 20/12/2007
6. அரசாணை எண் 204 ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் துறை நாள் 24/12/2007
7. அரசாணை எண் 132 ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் துறை நாள் 04/08/2008
8. அரசாணை எண் 392 நிதிj;(சம்பளம்) துறை நாள் 18/08/2009

அரசு ஆணை எண்: 392 நிதி சம்பளம் துறை நாள் 18/08/2000-ன்படி ரூ.5000/- உட்பட்ட **பணிகளுக்கு** மூடி முத்திரையிடப்பட்ட விலைப் புள்ளிகள் பெற்று குறைந்த விலைப்புள்ளியை ஏற்று பணியை மேற்கொள்ளலாம். ரூ.5000-க்கு **மேற்பட்ட பணிகளை** தமிழ்நாடு திறந்தவெளி ஒப்பந்த விதிகள் 2000-ன் படி நிறைவேற்ற வேண்டும்.

**அலுவலக தேவைகளுக்கு**

- அரசு ஆணை எண்: 206 நிதி (சம்பளம்) துறை நாள் 04/07/2017-ன்படி ரூ.5000/-உட்பட்ட அலுவலக சப்ளை தேவைகளை விலைப்புள்ளிகள் இன்றி கொள்முதல் செய்யலாம்.
- அதில் அலுவலக தலைவர் கீழ்கண்ட சான்று அளித்திட வேண்டும்.
- ***"I am Personally satisfied that these goods purchased are of the requisite quality and specifications and have been purchased from a reliable supplier at a reasonable price."***

- ரூ.5000/- க்கு மேற்பட்ட மற்றும் ரூ.10,00,000/- இலட்சத்திற்கு உட்பட்ட அலுவலக சப்ளை தேவைகளை தமிழ்நாடு திறந்தவெளி ஒப்பந்த விதிகள் 2000-ன் படி **"Limited Tender"** முறையில் நிறைவேற்ற வேண்டும்.
- ரூ.10,00,000/- இலட்சத்திற்கு மேற்பட்ட அலுவலக சப்ளை தேவைகளை தமிழ்நாடு திறந்தவெளி ஒப்பந்த விதிகள் 2000-ன் படி "**Open Tender"** முறையில் நிறைவேற்ற வேண்டும்.

**வரையறை-**

**கட்டுமானம்-** என்பது கட்டுமானம் தொடர்பான அனைத்து பணிகள். மறுகட்டுமானம். கட்டுமானத்தை இடித்து அப்புறப்படுத்துதல். கட்டடங்களின்; பழுது மற்றும் பராமரிப்பு மற்றும் கட்டுமானம் தொடர்பான இதர பணிகள் ஆகும். சரக்கு (Goods) என்பது கச்சா பொருட்கள். உற்பத்தி செய்த பொருட்கள். சாதனங்கள், பிற பொருட்கள் மற்றும் மின்சாரம் இதில் அடங்கும்.

**கொள்முதல்**- (Procurement) என்பது சரக்குகள் வாங்குவது. சேவைகள் மற்றும் கட்டுமானம் ஆகியவற்றை குறிக்கும்.

**கொள்முதல் நிறுவனம்**- (Procurement Entity) என்பது மேற்குறிப்பிட்ட சரக்குகள் வாங்கும். சேவைகள் மற்றும் கட்டுமானம் ஆகியவற்றை செயல்படுத்தும் நிறுவனங்களாகும். இங்கே ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை என்ற துறை கொள்முதல் நிறுவனமாகும்.

**ஒப்பந்தப்புள்ளி-(Tender)** என்பது கொள்முதல் நிறுவனமாகிய (Procurement Entity) அரசு துறையின் பணியை செயல்படுத்துவதற்கான முன்னோடி அழைப்பு ஆகும்.

| | |
|---|---|
| மாவட்ட ஒப்பந்த புள்ளி வெளியீட்டு அலுவலர் | அந்தந்த மாவட்டத்தின் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் |
| மாநில ஒப்பந்தபுள்ளி வெளியீட்டு அலுவலர் | இணை இயக்குநர். செய்தி மக்கள் தொடர்புத் துறை |

**ஒளிவு மறைவற்ற ஒப்பந்த சட்டம் 2000-ன் விதிகளின்படி ஒப்பந்தப்புள்ளி பணிகளை நிறைவேற்றும் சில சூழ்நிலைகள்|-**

ஒளிவு மறைவற்ற ஒப்பந்த சட்டம் 2000-ன் விதிக்கூறு 16-ன்படி கீழ்காணும் நேர்வுகளில் மட்டும் விதிக்கூறு 9 (செய்தித்தாள்களில் விளம்பரம் செய்தல், ஒப்பந்த மலரில் பதிப்பித்தல், கோரும் அனைத்து ஒப்பந்த்தார்களுக்கும் விலைப்புள்ளி படிவங்கள் வழங்குதல் போன்றவை) மற்றும் 10 (ஒப்பந்தபுள்ளிகளை ஏற்பது சார்பான சில இனங்கள்) ஆகியவற்றிற்கு விலக்களித்து ஒப்பந்தபுள்ளி அறிவிப்பை வெளியிடவும் விலைபுள்ளிகளை இறுதியும் செய்யலாம்.

1. இயற்கை இடர்பாடுகளின் போதும் அரசால் பிரகடணப்படுத்தப்படும் அவசர காலங்களிலும்
2. வேறு எந்த இடத்தில் இல்லாமலும் ஓரிடத்தில் (Single Source) தான் பொருட்கள், சேவைகள் உள்ளன மற்றும் அதற்கான தனிப்பட்ட உரிமை அவருக்கு மட்டுமே உரியதாகவும் மற்றும் வேறு எந்தவித மாற்று வழி இல்லாத சூழ்நிலையின் போதும்.
3. அரசு துறை. பொதுத்துறை. சட்டபூர்வ வாரியங்கள் ஆகியவற்றால் பொருட்கள். சேவைகள் அளிக்கப்பட்டால்
4. தாமே அப்பொருட்களை உற்பத்தி செய்யும் சிறு தொழில் நிறுவனங்களிடமிருந்து குறைந்த விலை (Low Value Procurement) மற்றும் உள்ளூர் தயாரிப்புகளை வாங்கலாம். (விதிக்கூறு 16-ன்

படி ரூ.50.00 இலட்சம் வரையிலான கட்டடப் பணிகள் ரூ.25.00, லட்சம் வரை பொருட்கள் கொள்முதல் மற்றும் ரூ.20.00 இலட்சம் வரையிலான வாகனம் கொள்முதல்)

5. மத்திய அரசின் GeM Portal மூலம் கொள்முதல்
6. விவசாயிகளிடமிருந்தும் அரசு கொள்முதல் நிலையங்களிடமிருந்தும் நேரடி கொள்முதல் (சில குறிப்பிட்ட வகையில் மட்டும்)

குறிப்பு: அரசாணை எண்: 63, நிதித்(சம்பளம்)துறை, நாள்: 01.03.2023-ன்படி மத்திய அரசின் GeM Portal மூலம் ரூ.25000 வரையிலான பொருட்களை சம்மந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து நேரடி கொள்முதல் (Direct on-line purchase) செய்துக்கொள்ளலாம்.

**மேல்முறையீடு**

ஒளிவு மறைவற்ற ஒப்பந்த புள்ளி சட்டத்தின் ஒப்பந்தப்புள்ளி ஒப்புக்கொள்ளும் அதிகாரியின் முடிவில் ஏற்படும் தனக்கு பாதிப்பு ஏற்பட்டதாக கருதுவோர் ஒப்பந்தபுள்ளி ஏற்கப்பட்ட 10 தினங்களுக்குள் அரசுக்கு முறையீடு செய்ய வேண்டும். அரசின் முடிவு 15 தினங்களுக்குள் முறையீட்டுதாரருக்கு தெரிவிக்கப்பட வேண்டும்.

**டெண்டர் எப்போது ரத்து செய்யலாம்?**

1. ஒற்றை விலைப்புள்ளி மட்டும் பெறப்பட்டால்
2. டெண்டர் கோரப்பட்ட வேலை மற்றும் பொருட்கள் தேவைப்படாவிட்டால் (Scope of Procurement)
3. புதிய தொழில்நுட்பம் மற்றும் வடிவமைப்பில் (Design) மாற்றம் ஏற்படும் போது
4. நீதிமன்ற உத்தரவு
5. விபத்துகள். இயற்கை இடர்பாடுகள் மற்றும் எதிர்பாராத சமயங்களில்
6. பேச்சுவார்த்தைக்குப் (Negotiation) பிறகு ஒப்பந்தப்புள்ளி ஏற்றுகொள்ளாதது
7. ஆணை வெளியிடுவதற்கு முன்பு ஒப்பந்தப்புள்ளி ஏற்கும் அதிகாரி தெரிவிக்கப்பட்ட (Quoted Rate) விலை வீதம் மதிப்பீட்டிற்கு அதிகமாகவோ அல்லது சந்தை விலைக்கு (Market Rate) அதிகமாக இருக்கும் பட்சத்தில் ஒப்பந்தப்புள்ளியை (Tender) தள்ளுபடி (Reject) செய்யலாம்.

ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் (Tender File)

1. வேலை அட்டவணை (List of works)
2. விலை விகிதம் (Schedule of Rates)
3. தேவைப்படும் சரக்கு அல்லது சேவையின் தேவை (Requirement of Goods or Services)
4. காலம் (Period)
5. தொழில்நுட்ப விவரக்குறிப்புகள் (Technical Specification)
6. செயல்முறை மற்றும் காரணிகள் / நிபந்தனைகள் (Procedure and Criteria)
7. ஒப்பீடு மற்றும் மதிப்பீடு

ஒப்பந்தப்புள்ளி விளம்பரம் அல்லது அறிவிக்கையில் இடம் பெற்றிருக்க வேண்டிய விவரங்கள்

1. எவ்வளவு மதிப்பிலான வேலைகள் அல்லது பொருட்கள்
2. திட்டத்தின் பயன்

3. டெண்டர் சமர்ப்பிக்க வேண்டிய இடம். நேரம்
4. டெண்டர் அழைக்கும் அதிகாரியின் விவரம் பதவி (Invitee)
5. நிறுவனத்தின் பெயர். விலாசம் (Procurement Entity)
6. ஒப்பந்த ஆவணங்களின் விலை. அவைகள் எங்கே எந்த இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்
7. டெண்டர் பிரிக்கும் இடம். நேரம்
8. தொழில்நுட்ப விவரங்கள் (சுருக்கமாக)
9. பட்டியல் வழங்கும் முறை (1 முதல் மற்றும் பகுதி அல்லது ஒட்டுமொத்தமாக மற்றும் 5% பிடித்தம் செய்வது உட்பட)
10. சேதாரம் குறித்து (Damages)
11. அபராதம் (Penalty)
12. போக்குவரத்து (Transportation)
13. பட்டியலில் பிடித்தம் செய்யப்படும் வரி விவரம் (Duties and Taxes) (IT, GST, Excise)
14. காப்பீடு (Insurance)
15. விலை சரிகட்டுதல் (Price adjustment) (நெடுஞ்சாலைத்துறை ஒப்பந்தம் 18 மாதங்களுக்கு நீட்டித்தல்)
16. அளவு 25% கூடுதலாகவோ அல்லது குறைவாகவோ வாங்குவதாக குறிப்பிட வேண்டும் (Quantity)
17. மதிப்பிடுவதற்கான நிபந்தனைகள் (Evaluation Criteria)
18. நடைமுறை செயல்திறம் (Effective Performance) (பொருள் எப்படி இருக்க வேண்டும் கட்டுமானம் குறித்தும்)
19. மேலும் ஒப்பந்தப்பணிகளில் குழந்தை மற்றும் கொத்தடிமை தொழிலாளர் எவரும் ஈடுபடுத்தப்படமாட்டார்கள் என்ற சான்றை ஒப்பந்ததாரர் சமர்ப்பிக்க வேண்டும்.
20. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் இயக்குநர் கடிதம் ந.க.22038/2008(PRI I-4), நாள்: 24.03.2008-ன்படி அனைத்து ஒப்பந்த அறிவிக்கைகளிலும் "***தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் ஒப்பந்தங்களில் கலந்து கொள்ள தகுதியில்லை***" என்ற வாசகம் இடம் பெற வேண்டும்.

**டெண்டர் சமர்ப்பிக்க குறைந்தபட்ச அவகாசம் (விதி 20)**

டெண்டர் அறிவிப்பு வெளியிடப்பட்ட நாள்/நாளிதழில் அறிவிப்பு வெளியிடப்பட்ட நாள் இவற்றில் எது பிந்தையதோ அந்த நாளுக்கும் ஒப்பந்ததாரர்களால் ஒப்பந்தப்புள்ளி அளிக்க வேண்டிய கடைசி நாளுக்கும் இடையே கீழ்கண்டவாறு இடைவெளி இருக்க வேண்டும்.

| டெண்டர் மதிப்பு | கால அவகாசம் |
|---|---|
| ரூபாய் 10 கோடி வரை | 15 நாட்கள் |
| ரூபாய் 10 கோடிக்கு மேல் | 30 நாட்கள் |

*[G.O. Ms. No. 19, Finance (Salaries), 20th January 2023]*

உரிய காரணங்களுக்காக ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலருக்கு அடுத்த உயர் அலுவலரது உத்தரவின்பேரில் டெண்டர் நாட்களை குறைக்கலாம்.

**ஒப்பந்த அறிவிப்பு விளம்பரம்-**

அரசாணை எண் 392 நிதித்துறை நாள் 18/08/2009. அரசாணை எண் 243 நிதி (சம்பளம்) துறை நாள் 21/08/2017

| **மதிப்பீடு தொகை** | **விளம்பரம்** |
|---|---|
| ரூபாய் 10 லட்சத்திற்குள் | ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலக விளம்பர பலகை அந்தந்த ஊராட்சி மன்றம் ஊராட்சி ஒன்றியம் அலுவலக தகவல் பலகையில் வெளியிட்டால் போதுமானது |
| ரூபாய் 10 லட்சத்திற்கு மேல் ரூபாய் 25 லட்சத்திற்குள் | மாவட்ட ஒப்பந்த புள்ளி மலரில் வெளியிடப்பட வேண்டும் |
| ரூபாய் 10 லட்சத்திற்குள் உள்ள தளவாடங்கள். உபகரணங்கள் கொள்முதல் | அலுவலக தகவல் பலகை மற்றும் வரையறுத்த ஒப்பந்தப்புள்ளி (Limited Tender) |

மேலும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை அரசின் இதற்கென உள்ள உரிய இணையதளத்தில் (https://tntenders.gov.in) வெளியிட வேண்டும்.

**வேலைகள் மேற்கொள்ள நாளேடுகளில் விளம்பரம்**

(அரசாணை எண்: 103, நிதித்துறை(சம்பளம்), நாள் 11.04.2022)

| மதிப்பு | செய்தித்தாள் பதிப்பு விவரம் |
|---|---|
| ரூபாய் 50 லட்சம் முதல் 75 லட்சம் வரை | ஓரு தமிழ் நாளேடின் மாவட்ட பதிப்பில் வெளியிட வேண்டும் |
| ரூபாய் 75 லட்சத்திற்கும் மேல் 10 கோடி வரை | தமிழ்நாடு முழுவதும் ஒரு தமிழ் நாளிதழ் மற்றும் ஒரு ஆங்கில நாளிதழ் |
| ரூபாய் 10 கோடிக்கும் மேல் 20 கோடி வரை | தென் இந்திய அளவில் ஒரு ஆங்கில நாளிதழ் மற்றும் தமிழ்நாடு முழுவதும் ஒரு தமிழ் நாளிதழ் |
| ரூபாய் 20 கோடிக்கு மேல் | அகில இந்திய அளவில் ஒரு ஆங்கில நாளிதழ் மற்றும் தமிழ்நாடு முழுவதும் ஒரு தமிழ் நாளிதழ் |

**கட்டுமான பொருட்கள், தளவாடம், உபகரணங்கள் வாங்குதல்**

| மதிப்பு | செய்தித்தாள் பதிப்பு விவரம் |
|---|---|
| ரூபாய் 25 லட்சம் முதல் 50 லட்சம் வரை | ஒரு தமிழ் நாளேடின் மாவட்ட பதிப்பில் வெளியிட வேண்டும் |
| ரூபாய் 50 லட்சத்திற்கும் மேல் 3 கோடி வரை | தமிழ்நாடு முழுவதும் ஒரு தமிழ் நாளிதழ் மற்றும் ஒரு ஆங்கில நாளிதழ் |
| ரூபாய் 3 கோடிக்கும் மேல் ஐந்து கோடி வரை | தென்இந்திய அளவில் ஒரு ஆங்கில நாளிதழ் மற்றும் தமிழ்நாடு முழுவதும் ஒரு தமிழ் நாளிதழ் |
| ரூபாய் 5 கோடிக்கு | அகில இந்திய அளவில் ஒரு ஆங்கில நாளிதழ் மற்றும் தமிழ்நாடு முழுவதும் ஒரு தமிழ் நாளிதழ் |

**நாளிதழ் விளம்பர அளவுகள்**

| பணிகள் மற்றும் கொள்முதல் மதிப்பு | நாளேடுகளில் விளம்பர அளவு |
|---|---|
| ரூ.10 கோடி வரையிலான பணிகள் / கொள்முதல்கள் | 50 சதுர செண்டி மீட்டருக்கு மிகாமல் |
| ரூ.10 கோடிக்கு மேற்பட்ட பணிகள் / கொள்முதல்கள் | 100 சதுர செண்டி மீட்டர் வரை |

ஒப்பந்த நமூனா (Schedule) சம்பந்தப்பட்ட தொழில் நுட்ப அலுவலரின் (Technical Sanction Authority) ஒப்புதல் பெறப்பட வேண்டும்.

**ஒப்பந்தப்புள்ளி நமுனா விலை விவரம்**

அரசாணை எண் 254 நெடுஞ்சாலைத்துறை (எச். எண்) துறை நாள் 05/12/2006 மற்றும் அரசாணை எண் 60 பொதுப்பணித்துறை நாள் 14/03/2008 மற்றும் அரசாணை எண்-197, பொதுப்பணித்துறை நாள்- 09/06/2008

| வேலையின் மதிப்பு | ஒப்பந்தப் புள்ளி விலை |
|---|---|
| வேலை மதிப்பு ரூபாய் 10,000-க்கு உட்பட்டது | ரூபாய் 150/- + 18% GST |
| ரூபாய் 10.000 முதல் 2,00,000 வரை | ரூபாய் 300/- + 18% GST |

| | |
|---|---|
| ரூபாய் 2,00,000 மேல் 5,00,000 வரை | ரூபாய் 750/- + 18% GST |
| ரூபாய் 5,00,000-க்கு மேல் 10,00,000 வரை | ரூபாய் 1500/- + 18% GST |
| ரூபாய் 10,00,000 க்கு மேல் 25,00,000 வரை | ரூபாய் 6000/- + 18% GST |
| ரூபாய் 25,00,000 க்கும் மேல் 50,00,000 வரை | ரூபாய் 9000/- + 18% GST |
| ரூபாய் 50,00,000 மேல் | ரூபாய் 15000/- + 18% GST |

**ஒப்பந்ததாரர்களுக்கு ஒப்பந்த விளம்பரம் அனுப்புதல்**

ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர் அவசியம் என கருதினால் ஒப்பந்தபுள்ளி விளம்பரத்தினை பதிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்கள் மற்றும் இதர ஒப்பந்ததாரர்களுக்கும், முந்தைய சப்ளையர்களுக்கும், பொருட்கள் சப்ளை செய்யக்கூடிய வேறு நிறுவனங்களுக்கும் மற்றும் அறிமுகமான நிறுவனங்களுக்கும் நேரடியாக அனுப்பி வைக்கலாம்.

**பிணை வைப்பு தொகை (Earnest Money Deposit)**

ஒப்பந்தத்தில் பங்கேற்கும் ஒப்பந்ததாரர் 1% சதவிகித தொகையை பிணை வைப்புத் தொகையாக ஒப்பந்த விளம்பரத்தில் கூறியவாறு ரொக்கமாக அலுவலக கஜானாவிலோ. வங்கி வரைவோலையாகவோ. தன் வங்கி காசோலையாகவோ. சிறு சேமிப்பு பத்திரங்கள் வாயிலாகவோ செலுத்தலாம். எவ்வகையில் பிணை வைப்பு தொகை செலுத்த வேண்டும் என்பதை ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர் முடிவு செய்து ஒப்பந்த அறிவிப்பின் அடிப்படையில் வெளியிட வேண்டும். அவ்வாறு பிணை வைப்புத் தொகை செலுத்தாமல் பெறப்படும் ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்படாமல் நிராகரிக்கப்பட வேண்டும். இந்த நிபந்தனை ஒப்பந்த விளம்பரத்தில் குறிப்பிடப்பட வேண்டும். மின்னணு ஒப்பந்தப்புள்ளி முறையில் இணைய வாயிலாக பிணை வைப்புத் தொகை செலுத்துவது குறித்த வழிமுறைகள் அரசாணை எண்: 360, நாள்: 08.12.2017-ல் வெளியிடப்பட்டுள்ளது.

**காப்புத் தொகை (Security Deposit)**

ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்பட்ட பின்பு ஒப்பந்தப்புள்ளியில் வெற்றிபெற்ற ஒப்பந்ததாரர் ஒப்பந்த தொகையில் 5% தொகையினை காப்புத் தொகையாக செலுத்தி முறையாக ரூபாய் 20 பத்திரத்தில் உடன்படிக்கை துறையுடன் செய்து கொள்ள வேண்டும். உடன்படிக்கையின்படி ஒப்பந்ததாரர் ஒப்பந்த விதிகளை மீறும் நிகழ்வில் காப்புத் தொகையை ஒரு பகுதியையோ அல்லது முழுமையாகவோ பறிமுதல் செய்யப் படலாம். நடைமுறையில்; செயல் திறனுக்காக (Effective Performance) ஒப்பந்ததாரரிடம் இருந்து ஒப்பந்த மதிப்பில் 10% தொகை நிறுத்தி வைக்கப்படலாம்.

**மதிப்பீட்டு காரணிகள் நடைமுறை குறித்து தெரிவித்தல்**

ஒப்பந்தப்புள்ளி ஆவணத்தில் (Tender Document) ஒப்பந்தத்தை பரிசீலிக்க விலையுடன் அளவுகளும் (Quantity) எவ்வாறு மதிப்பிடப்பட உள்ளது என்பதையும் குறிப்பிட வேண்டும். ஒப்பந்ததாரர் அனுபவம். உற்பத்தி மற்றும் கட்டுமான திறன் தொழில்நுட்பம் சார்ந்த மற்றும் இதர

தொழில் நுணுக்கங்கள் மற்றும் நிதி நிலை குறித்தும் ஒப்பந்ததாரரின் தகுதிகள் பரிசீலனை செய்யப்படும் என குறிப்பிட வேண்டும்.

**ஒப்பந்தப்புள்ளிகள் பெறுதல் மற்றும் திறத்தல்**

1/ ஒப்பந்தப்புள்ளிகள் முறையாகவும் பாதுகாப்பாகவும் bgறப்படுவதற்கு ஒப்பந்தப்புள்ளி அலுவலர் தகுந்த ஏற்பாடுகள் செய்திட வேண்டும்/ மின்னணு ஒப்பந்தத்தில் பெறப்பட்ட புள்ளிகள் உரியவாறு மின்னணு முறையில் வேறு எவரும் திறந்துவிடாதபடி பாதுகாப்பாக பூட்டப்பட்டிருக்க வேண்டும். (Electronically Locked)

2/ எந்த ஒரு ஒப்பந்த புள்ளியும் தொலை அச்சு நகல் வடிவத்தில் ஏற்கக்கூடாது.

3/ ஒப்பந்தப்புள்ளிகள் பெறுவதற்கான கடைசி நாள் மற்றும் நேரத்தில் ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர் பின்வரும் சூழ்நிலைகளில் மாற்றி அமைக்கலாம்.

1) டெண்டர் விளம்பரம் வெளியிடுவதில் தாமதம் ஆனால்
2) ஒப்பந்த விதி 17-ன்படி ஒப்பந்தம் விளம்பரம் வெளியிடப்பட்ட பின்னர் ஒப்பந்தப்புள்ளி அலுவலர் மாற்றங்கள் எதனையும். திருத்தம் எதனையும் ஒப்பந்தபுள்ளி வாங்கிய அனைத்து ஒப்பந்ததாரர்களுக்கும் தவறாமல் தகவல் அனுப்புவதுடன் இணையதளத்திலும் இதுகுறித்து திருத்த அறிவிப்பு (Corrigendum) வெளியிட வேண்டும்.
3) அறிவிப்பு வெளியிடுவதில் தாமதம் ஏற்படும் சூழ்நிலையில் ஒப்பந்தப்புள்ளி நாள் மற்றும் நேரம் மாற்றி அமைக்கலாம்.
4) எந்த ஒரு ஒப்பந்ததாரரும் ஒப்பந்தப்புள்ளி தொடர்பான விளக்கம் கோரும் போது அவருக்கு விளக்கம் அளிப்பதுடன் அவ்விவரம் குறித்து பிற ஒப்பந்ததாரர்களுக்கும் தெரியப்படுத்த வேண்டும். இத்தகைய நேர்வில் காலதாமதம் ஏற்பட நேரிட்டால் ஒப்பந்த நாள் மற்றும்; நேரம் மாற்றி அமைக்கலாம்.
5) வேறு ஏதேனும் நியாயமான காரணங்கள் இருப்பின் அதனை எழுத்துபூர்வமாக பதிவு செய்த பின்பு[ நாள் மற்றும் நேரம் மாற்றி அமைக்கலாம்.

**ஒப்பந்தப்புள்ளி திறத்தல் (Opening of Tender)**

1. ஒப்பந்த விளம்பரத்தில் குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்தில் படி ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படவேண்டும்/ விதி 17ன்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெற காலநீட்டிப்பு செய்திருந்தால் அந்தநாளில் குறிப்பிட்ட நேரத்தில் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட வேண்டும்.
2. ஒப்பந்தப்புள்ளிகள் இறுதி நாளில் முடிவுற்ற நேரத்திற்கு பின்பும் 1 மணி நேரத்திற்கு மிகாமலும் நேரம் நிர்ணயிக்கப்பட்டு அதன்படி பிரித்தல் வேண்டும்.
3. அனைத்து ஒப்பந்தப்புள்ளி உறைகளும் மற்றும் மின்னணு முறையில் (E. Tendering) பெறப்பட்ட ஒப்பந்த புள்ளிகளும் எண்ணப்பட வேண்டும்.
4. ஒப்பந்தபுள்ளி முடிவடையும் நேரம் வரை பெறப்பட்டவை மட்டுமே எண்ணப்பட வேண்டும். காலம் கடந்து பெறப்பட்டவை குறித்து உரிய பதிவு செய்து பிரிக்கப்படாமல் ஒப்பந்ததாரருக்கு திருப்பி அனுப்பிவிட வேண்டும். மின்னணு முறையில் தாமதமாக பெற நேர்ந்தால் தாமதமாக வரப்பட்டது என்பது குறித்து மின்னணு முறையில் தெரிவித்திட வேண்டும்.
5. ஒப்பந்தப்புள்ளிகள் நிர்ணயிக்கப்பட்ட நாள் மற்றும் நேரத்தில் வருகை தந்து இருக்கக்கூடிய ஒப்பந்ததாரர்கள் அல்லது அவரது அதிகாரம் பெற்றவர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

6. ஒப்பந்த புள்ளி பரிசீலனைக் குழு (Tender Scrutiny Committee) ஒப்பந்தப்புள்ளியில் பிரதான படிவத்தில் (Main Bill) விலைகள் மற்றும் திருத்தங்களை குறிப்பிட்டு கையொப்பமிட வேண்டும்.

7. ஒப்பந்தப்புள்ளி திறக்கும்போது கண்டறியப்பட்ட திருத்தங்கள் குறித்து தனியே பதிவுகள் செய்திட வேண்டும்.

8. ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள விலை வீதம் மற்றும் ஒப்பந்ததாரர் பெயர் சத்தமாக படித்து காண்பிக்க வேண்டும்/ முன் வைப்புத்தொகை செலுத்தப்பட்ட விவரம் மற்றும் தேவையான ஆவணங்கள் இணைக்கப்பட்டது குறித்து சரிபார்க்க வேண்டும். இந்த இடத்தில் ஆவணங்கள் சரிபார்க்கப்படுகிறது தவிர மதிப்பீடு செய்யப்படவில்லை)

9. ஒப்பந்தப்புள்ளி திறந்தல் குறித்த அனைத்து நடவடிக்கைகளும் பதிவேட்டில் பதிவு செய்வதுடன் வருகை தந்து இருக்கக்கூடிய ஒப்பந்ததாரர்கள் அல்லது அவரது அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளிடமிருந்து கையொப்பம் பெற வேண்டும் (கையொப்பம் இட விரும்பாதவர்கள் தவிர)

10. ஒப்பந்தப்புள்ளிகள் திறந்த பின்பு ஒப்பந்தப்புள்ளி படிவங்களில் எவ்வித திருத்தமும் அல்லது மாற்றமோ செய்திட அனுமதிக்கக்கூடாது.

**<u>ஒப்பந்தப்புள்ளிகளை கூர்ந்தாய்வு செய்தல்.</u>**

(தமிழ்நாடு ஊராட்சிகள் (பணிகளுக்கான திட்டங்களையும், திட்ட மதிப்பீடுகளையும் தயாரித்தல், சரக்குகள். சேவை வழங்கல் ஆகியவற்றின் ஒப்பந்தங்களுக்கான முறை மற்றும் நிபந்தனைகள்) 2024) (அரசாணை எண்:106, ஊரக வளர்ச்சித் (PR-I) துறை, நாள்: 22.06.2024)

(Tender Scrutiny) ஒப்பந்தப்புள்ளிகளை கூர்ந்தாய்வு (Scrutiny) செய்ய கீழ்கண்டவாறு ஒரு குழு ஏற்படுத்தப்பட வேண்டும். அக்குழுவானது ஒப்பந்த ஆவணங்களை ஆய்வு செய்து, ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கும் பணியை மேற்பார்வை செய்தல், ஆரம்பகட்ட தகுதிகளை ஆராய்வது மற்றும் ஒப்பந்தப்புள்ளியை மதிப்பீடு (Evaluation) செய்வது உள்ளிட்ட பணிகளை இக்குழு மேற்கொள்வதுடன் ஒப்பந்தப்புள்ளி ஏற்பு அதிகார அமைப்பு கருத்தில் கொள்வதற்கான மதிப்பீட்டு அறிக்கையையும் தயாரிக்கும்.

| வ.எ | ஒப்பந்தப் புள்ளி கோரும் அதிகார அமைப்பு | ஒப்பந்தப் புள்ளி கூர்ந்தாய்வுக் குழு | பணியின் மதிப்பு |
|---|---|---|---|
| 1 | செயல்படுத்தும் அமைப்பு, கிராம ஊராட்சி | (1) மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர்<br>(2) பணி மேற்பார்வையாளர்<br>(3) ஊராட்சி செயலர் | ரூபாய் ஐந்து இலட்சத்திற்கு மிகாமல் |
| | | i) உதவிப் பொறியாளர்<br>(ii) மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர்<br>(iii) ஊராட்சி செயலர் | பணியின் மதிப்பு<br>ரூபாய் ஐந்து இலட்சத்திற்கு மிகையாவும், ரூபாய் இருபத்து ஐந்து இலட்சத்திற்கு மிகாமல் |

| | | | |
|---|---|---|---|
| | | (i) வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி ) (ii) உதவிப் பொறியாளர் (iii) மண்டல துணை வட்டார வைளர்ச்சி அலுவலர் (iv) ஊராட்சி செயலர் | ரூபாய் இருபத்து ஐந்து இலட்சத்திற்கு மேல் |
| 2 | வட்டார வளர்ச்சி அலுவலர் (கிஊ) | (1) உதவிப் பொறியாளர் (ii) மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (iii) துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (திட்டங்கள்) | ரூபாய் இருபத்து ஐந்து இலட்சத்திற்கு மிகாமல் |
| | | (i) வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) (ii) உதவிப் பொறியாளர் (iii) மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (iv) துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (திட்டங்கள்) | ரூபாய் இருபத்து ஐந்து இலட்சத்திற்கு மேல் |
| 3 | வட்டார வளர்ச்சி அலுவலர் (வஊ) | 1) உதவிப் பொறியாளர் (ii) மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (iii) துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (நிருவாகம்) | ரூபாய் இருபத்து ஐந்து இலட்சத்திற்கு மிகாமல் |
| | | i) வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) (ii) உதவிப் பொறியாளர் (iii) மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (iv) துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (நிருவாகம்) | ரூபாய் இருபத்து ஐந்து இலட்சத்திற்கு மேல் |
| | திட்ட மாவட்ட வளர்ச்சி அல்லது இயக்குநர். ஊரக முகமை அரசால் குறிப்பிடப்பட்டவாறாக ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் உள்ள | (I) திட்ட இயக்குநர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை (ii) செயற்பொறியாளர் (ஊரக வளர்ச்சி) (iii) கணக்கு அலுவலர். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை | அனைத்து பணிகள் |

| | | | |
|---|---|---|---|
| | அதையொத்த செயல்படுத்தும் அதிகார அமைப்புகள் | (iv) ஒப்பந்தப் புள்ளி கோரும் அதிகார அமைப்பால் நியமிக்கப்பட்ட உதவி திட்ட அலுவலர் மற்றும் உதவி செயற்பொறியாளர் (ஊரக வளர்ச்சி/சாலைகள் பாலங்கள்) | |

**ஒப்பந்தப்புள்ளிகள் திறந்தவுடன் ஒப்பந்ததாரர் தகுதிகளை தீர்மானிக்க ஆரம்ப கட்ட பரிசீலனை மேற்கொள்ளப்படும் (விதி 28)** அதன்படி.

(அ) ஒப்பந்த ஆவணங்களில் குறிப்பிட்ட தகுதிகள் ஒப்பந்தப்புள்ளி எடுத்தவர் பெற்றிருக்கிறாரா என்பதையும்

(ஆ) ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்கப்பட்டு இருக்க வேண்டிய ஆவணங்கள் ஒப்பந்ததாரரின் கையொப்பத்துடன் இருக்க வேண்டும்

(இ) ஒப்பந்தப்புள்ளியுடன் முன்வைப்பு தொகை செலுத்தப்பட்டிருக்க வேண்டும்.

(ஈ) ஒப்பந்தப்புள்ளியானது வரையறுக்கப்பட்ட தொழில்நுட்ப தகுதியுடனும். பணியை நிறைவேற்றுவதற்கான நிதி தொடர்பான தகுதிகளை கொண்டிருக்கிறதா எனவும் மேற்குறித்த நிபந்தனைகளை பூர்த்தி செய்யாத நிலையில் ஒப்பந்தப் புள்ளியை இந்த நிலையிலேயே நிராகரிக்கலாம்.

**குறைந்த விலை புள்ளியை தீர்மானித்தல்**

மேற்குறித்த ஆரம்ப நிலை பரிசீலனையில் தகுதி வாய்ந்த ஒப்பந்தப்புள்ளிகளை அடுத்ததாக மதிப்பீட்டிற்கு எடுத்துக்கொள்ள வேண்டும்/ ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளின்படி குறைந்த விலை அளித்த ஒப்பந்தப்புள்ளியை பரிசீலிக்க வேண்டும்.

**மதிப்பீடு மற்றும் ஒப்பந்தப்புள்ளி ஏற்பு**

1. ஒப்பந்தப்புள்ளி ஏற்கும் அலுவலர் ஒப்பந்தப்புள்ளி வெளியீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள விலை விகிதங்கள் மற்றும் அப்போதைa சந்தை விலை ஆகியவற்றுடன் உள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்த விளம்பரத்தில் குறிப்பிட்ட நிபந்தனைகளுக்குட்பட்டு பரிசீலிக்க வேண்டும்.

2. மேற்குறிப்பிட்டவாறு பரிசீலனை முடிந்த பிறகு குறைவான விலைப்புள்ளியை ஒப்பந்த பின்னணியின் நோக்கத்தின்படி தீர்மானிக்க வேண்டும். குறைந்த விலை புள்ளியைத் தேர்வு செய்யும் போது அவ்விலையானது சந்தை மதிப்பைவிட அல்லது ஒப்பந்த ஆவணங்களில் குறிப்பிட்ட விலை வீதத்தை விட அதிகமாக இருக்குமானால் ஒப்பந்தம் ஏற்கும் அலுவலர் அந்த குறைந்த விலை புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரரிடம் பேச்சுவார்த்தை நடத்தி விலை வீதங்களை குறைக்குமாறு கோரலாம். ஒப்பந்தப்புள்ளி பரிசீலனையின் போது ஏதாவதொரு ஒப்பந்ததாரர் மற்றொரு கொள்முதல் நிறுவனத்தால் (Procurement Entity) தடை செய்யப்பட்டதாக தெரியவந்தால் அந்த ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப் புள்ளியை நிராகரிக்கலாம்.

3. ஒப்பந்தப்புள்ளி பரிசீலனையின் போது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்ததாரர்கள் ஒரே விதமான விலை குறிப்பிட்டிருந்தால் கொள்முதலை ஒப்பந்ததாரர்களின் முன் அனுபவம் முந்தைய செயல்பாடுகளின் அடிப்படையில் அவர்களிடையே கொள்முதலை பிரித்து

வழங்கலாம் அவ்வாறு பிரித்து வழங்க இயலாத நிலை ஏற்பட்டால் அதனை எழுத்துபூர்வமாக பதிவு செய்திட வேண்டும்.

4. மதிப்பீட்டில் அனைத்து விதமான மத்திய வரிகள் (சுங்கம் மற்றும் கலால்) கணக்கில் கொள்ளப்பட வேண்டும்.

5. ஒப்பந்தபுள்ளி பரிசீலனைக் குழு அல்லது ஒப்பந்தப்புள்ளி பரிசீலிக்கும் அலுவலர் விரிவான மதிப்பீடு அறிக்கையை உரிய நிலையான படிவத்தில் தயாரித்து ஒப்பந்தபுள்ளி ஏற்கும் அலுவலருக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

6. ஒப்பந்தப்புள்ளி ஏற்கும் அலுவலர் இந்த அறிக்கையினை உரிய தொழில்நுட்ப அனுமதி வழங்கிய அலுவலரது ஒப்புதல் பெற்று ஒப்பந்தப்புள்ளியை ஏற்று இறுதி ஆணை வழங்க வேண்டும். ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியம் அல்லது மாவட்ட ஊராட்சி பொது நிதி பணிகள் எனில் ஒப்பந்தபுள்ளி ஏற்கும் முன்பு அந்தந்த ஊராட்சியின் குழுவில் ஒப்புதல் பெற்று இறுதி ஆணை பிறப்பிக்க வேண்டும்.

**<u>கொள்முதல் செய்வதில் சிறப்பு நேர்வுகள்</u>**

ஒரு சரக்கு கொள்முதலுக்கான ஒப்பந்தபுள்ளி பரிசீலனையில் குறைந்த விலை புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான பொருளைவிட குறைவான எண்ணிக்கை மட்டும் சப்ளை செய்ய விலைப்புள்ளி அளித்திருந்தால் எல்லா நிபந்தனைகளும் சரியாக இருந்தால் அந்த ஒப்பந்ததாரருக்கு அவர் குறிப்பிட்ட எண்ணிக்கை பொருட்களை சப்ளை செய்ய அனுமதிக்கலாம். அவ்வாறு அனுமதி அளித்த பின்பு மொத்த தேவையில் மீதமுள்ள பொருட்களை சப்ளை செய்ய அடுத்து குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய அடுத்தடுத்த விலை விகிதம் குறிப்பிட்ட ஏறு வரிசை மாறாமல் ஒப்பந்ததாரர்களிடம் இருந்து ஏற்கனவே குறைந்த விலை ஏற்கப்பட்டதற்கேற்ப அதற்கேற்ப தங்களது விலையை குறைத்திட கேட்டு அதன்படி மிகுதி தேவைக்கான சப்ளை அனுமதி வழங்கலாம். (அல்லது) ஒப்பந்தப்புள்ளியில் பங்கேற்ற இதர அனைத்து ஒப்பந்ததாரர்களிடம் இருந்தும் எஞ்சிய தேவையான பொருட்களை சப்ளை செய்திட ஏற்கனவே ஏற்றுக்கொள்ளப்பட்ட குறைவான வீதத்திற்கேற்ப மூடி முத்திரை இடப்பட்ட உரையில் அவர்களது விலையை குறிப்பிட கோரலாம். அவ்வாறு பெறப்பட்ட உரைகளை பிரித்து ஏற்கனவே அனுமதித்த குறைவான விலைக்கு ஏற்ப மீதமுள்ள தேவையான பொருட்கள் சப்ளை செய்திட முதல் விலைப்புள்ளி யின்போது அடுத்த குறைவான விலை குறிப்பிட்டிருந்த ஒப்பந்ததாருக்கு முன்னுரிமை வழங்கி எஞ்சிய தேவைக்கு அனுமதி வழங்கலாம். அந்த ஒப்பந்ததாரரும் மீதமுள்ள தேவையான பொருட்களை சப்ளை செய்ய இயலாமல் எந்த அளவிற்கு சப்ளை செய்ய சம்மதிக்கிறாரோ அந்த அளவிற்கு அவருக்கு அனுமதி வழங்கி விடலாம் இன்னமும் தேவைப்படும் பொருட்களை அடுத்தடுத்த விலை விகிதங்களில் உள்ள ஒப்பந்ததாரர்களுக்கு வேறுபட்ட விலை வீதங்களில் அனுமதித்து சப்ளையை முழுமை செய்திடலாம் அவ்வாறு வேறுபட்ட விலைகளை தீர்மானிக்கும் போது ஒரு அதிகபட்ச விலை வரம்பை ஒப்பந்தபுள்ளி அலுவலர் தீர்மானித்து அந்த விலை வரை மட்டும் எவ்வளவு பொருட்கள் கொள்முதல் செய்ய இயலுமோ அதுவரை அனுமதித்து கொள்முதல் தேவை குறைவாக இருப்பினும் அதனை கைவிடலாம்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரால் நிர்வகிக்கப்படும் நிறுவனங்கள் கல்ந்து கொண்டு ஒப்பந்தப்புள்ளி வழங்கியிருப்பின் அவ்வொப்பந்தப்புள்ளி மிகக்குறைந்த ஒப்பந்தப்புள்ளியை விட

கூடுதலாக இருப்பின், அந்நிறுவனம் மிகக்குறைந்த ஒப்பந்தப்புள்ளி ஈடாக பொருட்களை சப்ளை செய்ய சம்மதம் தெரிவித்தால், மொத்த கொள்முதலில் 5% அளவிற்கு அந்நிறுவனத்திடமிருந்து மிகக்குறைந்த ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் கொள்முதல் செய்யலாம். *[G.O. Ms. No. 22, Finance (Salaries), 24th January 2023]*

ஒப்பந்தக்காரர்களிடம் பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகள், ஒப்பு நோக்குப் பட்டியல் (Comparative Statement) தயார் செய்து, குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரருக்கு உரிய அலுவலரின் குறைந்த ஒப்பந்த புள்ளிக்கான அனுமதி (Tender Concurrance) பெறப்பட்ட பின்னர் வேலை உத்தரவு வழங்கப்பட வேண்டும்.

## மின்னணு ஒப்பந்தமுறை

தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்த சட்டம் 2000ன் நோக்கம் ஒப்பந்தப்புள்ளிகளில் நேர்மையான மற்றும் ஒளிவுமறைவற்ற தன்மையை உருவாக்கிட வெளியிடப்பட்ட சட்டமாகும். இந்த சட்டத்தின்படி அரசாணை எண்177 நிதி (சம்பளம்) துறை நாள் 22.05.007ன்படி மின்னணு ஒப்பந்தம் செயல்படுத்த ஆணை பிறப்பிக்கப்பட்டது. இது 01.07.2007 முதல் இரு கட்டங்களாக நடைமுறைப்படுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டது. முதற்கட்டமாக ரூ.10.00 இலட்சத்திற்கு மேல் மதிப்புள்ள பணிகள் மின்னணு ஒப்பந்த முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தது. அரசாணை எண்:94, நிதி(சம்பளம்)துறை, நாள்:30.03.2023-ன் படி 01.04.2023 முதல் தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998-ன் பிரிவு 16-ல் தெரிவிக்கப்பட்ட விலக்களிக்கப்பட்ட இனங்கள் (Low value procurement) தவிர அனைத்து டெண்டர் நடைமுறைகளும் மின்னணு ஒப்பந்தப்புள்ளி முறையில் செயல்படுத்த உத்தரவிடப்பட்டுள்ளது. அசாதாரண சூழ்நிலையில் ரூ.50.00 இலட்சம் வரையிலான பணிகளை மின்னணு ஒப்பந்தப்புள்ளி முறையில் அல்லாது சிறப்பு குறிப்புரையுடன் மேற்கொள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

1. அரசாணை எண்: 471 நிதி(சம்பளம்) துறை நாள் 30.09.2007-ல் மின்னணு முறையில் ஒப்பந்த புள்ளி கோர தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்த விதிகள் 2000-க்கு தேவையான சட்ட திருத்தங்கள் வெளியிடப்பட்டுள்ளன.
2. ஒப்பந்த விளம்பரம் வழக்கமான அனைத்து முறைகளிலும் வெளியிடப்படுவதுடன் மின்னணு ஒப்பந்தப் புள்ளிகளுக்கான இணையத்தளத்திலும் வெளியிடப்படவேண்டும்.
3. ஒப்பந்தப்புள்ளி படிவங்களை இணையத்தளத்திலிருந்து இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ள அனுமதிக்கவேண்டும்.
4. மின்னணு ஒப்பந்தப்புள்ளி முறையில் இணைய வாயிலாக பிணை வைப்புத் தொகை செலுத்துவது குறித்த வழிமுறைகள் அரசாணை எண்: 360, நாள்: 08.12.2017-ல் வெளியிடப்பட்டுள்ளது.
5. இதனை செயல்படுத்துவதற்காக https://tntenders.gov.in என்ற இணையதளம் உள்ளது.

**குறிக்கோள்** - மின்னணு ஒப்பந்தப்புள்ளியின் 2000ம் ஆண்டு தமிழ்நாடு வெளிப்படையான ஒப்பந்தச்சட்டத்தின் படி அரசின் ஒப்பந்தங்கள் வெளிப்படைத் தன்மையுடனும் அரசுப் பணிகளில் திறமை வாய்ந்த பெருவாரியான குறைந்த விலையிலான ஒப்பந்ததாரர்கள் பங்குபெற வாய்ப்பு ஏற்படுத்துவதேயாகும்.

**********